# இரண்டு சாட்சிகள்




பாடம் 6 மே 11, 2024




“புல் உலர்ந்து பூ
உதிரும்; நமது
தேவனுடைய வசனமோ
என்றென்றைக்கும்
நிற்கும்” (ஏசாயா 40:8)

இரண்டு மிகப்பெரிய சீர்திருத்தவாதிகளின் மரணத்திற்கு பின், சீர்திருத்தம் தேங்கி நின்றது. சீர்திருத்தமடைந்த சபைகள் குளிர்வடைந்து, கடினமாகி, சகிப்புத்தன்மையற்றதாகவும் மாறியது.

அரசியல் மற்றும் தத்துவ உலகில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. பரவலான உறுதியற்றதன்மை, யாத்ரீகர்களை போன்ற சிலர், தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி, “சுதந்திர தேசத்தில்” வட அமெரிக்காவில் உதவி தேட வழிவகுத்தது.

ஐரோப்பாவில், நெருக்கடி ஒரு புரட்சி வடிவத்தில் வெடித்தது. நவீன ஐரோப்பாவின் முதல் நாத்திக நாடாக நின்றது.



அத்தருணம் முதல், தேவன் “இரண்டு சாட்சிகளை” பாதுகாத்தார். வரலாற்றின் இந்த தருணங்களில் அவர்களுக்கு என்ன நடந்தது?



- **யார் இந்த இரண்டு சாட்சிகள்?**
- **எவ்வளவு காலம் அவர்கள் சாட்சி அளித்தார்கள்?**
- **அவர்கள் எப்படி மரித்தார்கள்?**
- **அவர்கள் எப்போது உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு ஏறினார்கள்?**
- **அதன்பின் என்ன நடந்தது?**

# யார் இந்த இரண்டு சாட்சிகள்?

"பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே." (வெளிப்படுத்தல் 11:4)

இங்கு குறிப்பிடப்பட்ட இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் (வெளி. 11:4) சகரியா 4ல் உள்ள தரிசனத்துக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. அதில், ஒலிவமரங்கள் ஏழு கிளைகளுள்ள குத்துவிளக்குகளுக்கு எண்ணெய் கொடுத்தது (சகரியா. 4:1-3 , 12).

ஒலிவ மரங்கள் "அபிஷேகம்பண்ணப்பட்ட இருவரை" குறிக்கிறது, அவை விளக்குத்தண்டுடன் சேர்ந்து, "தேவனுடைய வார்த்தையை" பிரதிநிதித்துவம் செய்கிறது(சகரியா. 4:6, 14). அதாவது, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள்.






# யார் இந்த இரண்டு சாட்சிகள்?

**மோசேயையும் எலியாவையும் அடையாளங்களாக பயன்படுத்தி, இந்த இரண்டு சாட்சிகளைப் பற்றி வெளிபடுத்தல் 11 கூறுகிறது**





| | | | | |
|---|---|---|---|---|
| இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்கள் (3) | ஆண்டவருக்குமுன்பாக நிற்கிறவர்கள் (4) | ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்படும் (5) | மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு (6அ) | அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு. (6ஆ) |
| உபத்திரவ காலங்களில் வேதம் பாதுகாக்கப்பட்டது | தேவன் தன்னுடைய வார்த்தை மறைந்து போக அனுமதிக்கவில்லை | வேதாகம செய்தி அதன் எதிரிகளை “பட்சிக்கும்”(எரே. 5:14) | வேதாகமத்தை நிராகரிப்பவர் பரிசுத்த ஆவியின் (எண்ணெய்) மழையை இழக்கிறார். | வேதாகமத்தை படித்தவர்கள் மட்டுமே இடைக்காலத்தின் வாதைகள் மற்றும் ஆன்மீக இருளில் இருந்து விடுவிக்கப்பட்டனா |

மோசே மற்றும் எலியாவை போலவே, வேதமும் பல துன்புறுத்தல்களை சந்திக்கும்: நாத்திக அரசாங்கஙகளோடு அது போராட வேண்டும்; அது எரியும் உணர்வுகளை பற்ற வைக்கும்… இந்த தீர்க்கதரிசனத்தின் துல்லியத்தை வரலாறு நமக்கு உறுதிப்படுத்துகிறது.

# எவ்வளவு காலம் அவர்கள் சாட்சி அளித்தார்கள்?

"என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன். (வெளி. 11:3)

தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்திற்கு முன்பாக தொழுதுகொள்ளுவர்களையும் காட்சிப்படுத்துவதோடு வெளிப்படுத்தல் 11 துவங்குகிறது (வெளி. 11:1).


பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் நீதிமன்றம் பூமி, அங்கு "புறஜாதிகள்" – அவிசுவாசிகள் – "பரிசுத்த நகரத்தை" – தேவனுடைய ஜனங்களை – 42 மாதமளவும் மிதிக்கிறார்கள் (வ. 2).

அந்த நேரத்தில், தேவனுடைய வார்த்தை "இரட்டுத்திக்கொண்டிருந்தது" – மிகப்பெரிய துன்புறுத்தல்கள் – (வ. 3) [42 மாதங்கள் x 30 நாட்கள் = 1,260 நாட்கள் (தீர்க்கதரிசனத்தின்படி, 1,260 வருடங்கள்)].



538 வருடமுதல், ரோம திருச்சபை படிப்படியாக தனது பாரம்பரியத்தை தேவனுடைய வார்த்தைக்கு மேலாக திணிக்க தொடங்கியது, வேதத்தை படிப்பதை தடைசெய்து, அதை வைத்திருந்தவர்களை, அதை படித்தவர்களை, அல்லது அதன் நம்பிக்கைகளின்படி (கோட்பாடுகள்) வாழ்ந்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் நிலையை அடைந்தது.

இந்த இருண்ட காலத்தின் நிறைவில், சீர்த்திருத்தவாதிகள் இந்த துன்புறுத்தல்களுக்கு தற்காலிக நிவாரணம் அளித்தனர்.(மத். 24:22).



# அவர்கள் எவ்வாறு மரித்தார்கள்?

"அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும்." (வெளிப்படுத்தல் 11:7)



வெளி 11:7ல் குறிப்பிடப்பட்டுள்ள பாதாளம் பேய்கள் வசிக்கும் இடத்தை விவரிக்கிறது (வெளி. 9:11; 20:1-3; லூக்கா 8:30-31). அந்த மிருகம் அரசியல் மற்றும் மத வல்லமையை விவரிக்கிறது (வெளிப்படுத்தல் மற்றும் தானியேலில் குறிப்பிடப்பட்டதை போல).

1260 ஆண்டுகளின் முடிவில், அதாவது 1798ஆம் ஆணடில் என்ன வல்லமை எழுந்தது?

பிரஞ்சு புரட்சி, 1789ல் துவங்கியது, "பயங்கரவாத அரசாங்கம்" என்று அழைக்கப்படுவதற்கு வழிவகுத்தது (1793-1794), இந்த அரசங்கத்தின் பின்னனியில் யார் இருக்கிறார்கள் என்பதை மிகத் தெளிவாக்கியது: சாத்தானும் அவனுடைய ஆவிகளும். இந்த அரசாங்கம் 3 வழிகள் என்று அழைக்கப்படுகிறது (வெளி. 11:8):



*சோதோம்*: புரட்சி பெரும் ஒழுக்கக்கேட்டின் காலகட்டத்தை தொடங்கியது




*எகிப்து*: நாத்திக அரசாங்கம் (யாத். 5:2), "பகுத்தறிவு தெய்வத்தை" வணங்குவதை அவர்கள் விரும்பில்லையென்றாலும்.



*இயேசு சிலுவையிலறையப்பட்டபோது*: இயேசுவின் பலி நிராகரிக்கப்பட்டது

இந்த காலத்தில்தான், மதம் ஒழிக்கப்பட்டது, வேதம் தடைசெய்யப்பட்டு எரிக்கப்பட்டது.

# அவர்கள் எப்போது உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு ஏறினார்கள்?


"மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது, அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று." (வெளிப்படுத்தல் 11:11)



நவம்பர் 26, 1793ல், மதத்தை ஒழிக்கும் ஆணையை பாரிஸ் வெளியிட்டது. இந்த ஆணை ஜூன் 17 1797 அன்று ரத்து செய்யப்பட்டது. இந்த மூன்றரை வருட காலத்தில், பிரான்ஸ் மகிழ்ச்சியடைந்தது, மற்றும் மதத்தின் கொடுங்கோன்மையிலிருந்து விடுதலையடைந்ததற்கும் வேதத்தின் சத்தத்தை அமைதிபடுத்தியதற்கும் மகிழ்ச்சியடைந்தது (வெளி. 11:9-10).

அமைதிப்படுத்துவதற்கு அல்லது அழிக்கப்படுவதற்கு பதிலாக, வேதம் முன்பைவிட வலுவாக எழுந்தது. புரட்டஸ்டன்ட் பணிகள் பூமியின் முனைகளுக்கு நற்செய்தியை கொண்டு சென்றன (வெளி. 11:11).

வில்லியம் வில்பர்போர்ஸ் 1804ல் வேதாகமத்தை விநியோகிப்பதற்காக முதல் வேதாகம சங்கத்தை உருவாக்கினார். வேதாகமத்தின் தற்போதைய பிரதிகள் ஆயிரகணக்கில் பெருகி, அது உலகிலேயே அதிகம் விற்பனையாகும் முதல் புத்தகமாக மாறியது. தற்போது, தேவனுடைய வார்த்தையின் விநியோகம் தடுக்க முடியாததாய் இருக்கிறது. யாராலும் அழிக்க முடியாத சூழ்நிலையில் தேவனால் வைக்கப்பட்டுள்ளது (வெளி. 11:12).



# அதன்பின் என்ன நடந்தது?

"அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின." (வெளிப்படுத்தல் 11:19)

இரண்டு சாட்சிகளின் உயிர்தெழுதலில் இருந்து, அண்டசராசர மோதலின் இறுதி அத்தியாயம் தொடங்குகிறது: முடிவின் நேரம்.

இந்த காலம் இரண்டாம் வருகையில் உச்சம் பெறும். அப்போது எல்லா ராஜ்யங்களும் இயேசுவின் உடைமையாக மாறும், அவர் நித்தியமாக ஆட்சி செய்வார் (வெளி. 11:15).


இந்த காலம் தேசங்கிளுக்கிடையில் கோபத்தை தூண்டிவிடும், மேலும் பூமியை "அழிப்பவர்களின் அழிவுடன்" முடிவடையும் (வெளி. 11:18).

இந்த நிகழ்வுகள் அனைத்தும் பரலோகத்தில் தொழுகையின் பிண்ணனியில் கட்டமைக்கப்பட்டுள்ளன(வெளி. 11:16-17), இது பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் உடன்படிக்கை பெட்டியின் தரிசனத்தோடு நிறைவடைகிறது (வெளி. 11:19).

"நியாயத்தீர்ப்பின் நேரம்" வந்துவிட்டது (வெளி. 11:18), நியாயத்தீர்ப்பின் தரம் உலகிற்கு காட்டப்பட்டுள்ளது: உடன்படிக்கையின் பெட்டியிலுள்ள பத்து கற்பனைகள்.



“தேவனுடைய வார்த்தையை உண்மையாய் தேடுகிற ஒவ்வொருவரின் அருகில் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார், சத்தியத்தின் மறைக்கப்பட்ட முத்துக்களை கண்டறிய பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார். தெய்வீக வெளிச்சம் அவரது மனதில் வருகிறது, ஒரு புதிய, மலர்ச்சியான முக்கியத்துவதுடன் சத்தியத்தின் முத்திரை குத்தப்படுகிறது. முன் எப்போதும் இல்லாத அளவு மகிழ்ச்சியினால் அவர் நிரப்பப்படுகிறார். சமாதானத்தின் தேவன் அவர்முன் நிழலிடுகிறார். சத்தியத்தின் மதிப்பு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உணரப்படுகிறது. ஒரு பரலோக வெளிச்சம் வார்த்தையின் மீது பிரகாசிக்கிறது, ஒவ்வொரு எழுத்தும் தங்கத்தால் வர்ணம் பூசப்பட்டதுபோல் தோன்றும். தேவன் தாமே இதயத்துடன் பேசி, தம்முடைய வார்த்தையை ஆவியாகவும் ஜீவனாகவும் மாற்றுகிறார்”




எலன் ஜி உவைட் (ரிபளக்டிக்ங் க்றைஸ்ட், ஏப்ரல் 14)